தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VII.—No. 6] MADRAS:—SUNDAY FEBRUARY 5, 288. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

நன்றி.
துரபிமானம்.
மோட்சஉலகம் எங்கேயிருக்கிறது.
இந்துசோதிடம.
சில்லறை.

நன்றி.

நன்றி என்பது ஒருவருக்கு இடுக்கணுண்டானபோது கரணத்திரயங்களாலும் செய்யும் உதவியேயாம். அதாவது பொருட்கொடையாலும் சரீர முயற்சியாலும் வாக்கு சகாயத்தாலும் பிறர்க்கு வேண்டற்பாலதாகிய ஓர் காரியத்தை முற்றுவித்தலும் அன்னோர் மானுபிலாஷத்தைச் சம்பூர்ணஞ் செய்தலுமே. நன்றி என்பது இத்துணைத்தென அளவிடற்பாலதல்லாது விடினும் அதனைப் பெறுவான தன்மையளவினதாக விருக்குமென்பது சற்றுணர்ந்த விவேகிகள் துணிபு. தன்னுயிர்போல மன்னுயிரைப் பாதுகாத்தலே மனிதவிலக்கணமாதலால், மனிதர், தாம் பிறர்பால் எதிர்நோக்கிப்பெற விரும்பும் ஒவ்வொன்றையும் தாம் பிறர்க்குஞ் செய்தல்வேண்டும். இவ்வாறு செய்தலைவிட்டுச் சிலர் தமக்கோர் சகாயம் வேண்டில் பிறரிடத்தில் பலமுறை ஓடித்திரிந்துபெற்றும் தாம் பிறர்க்கோர் சகாயம் செய்யவேண்டில் பின்னிட்டும், மேல் பார்த்தும், பெருமை பாராட்டியும் வருகின்றார்கள். இதனால் அவர்கள் அறிவின சிறுமையும் விவேக சூனியமும் அற்பத்துவமும் நன்கு விளங்குகின்றன. இவ்வுலகத்தின்கண் மனிதராக உற்பவித்தோர் உறுபயன் யாதோ! ஒருவருக்கொருவர் சகாயப்படாவிட்டால் உலக வியவகாரம் எங்ஙனம் நடக்கும்? ஒருவனே தனது ஜீவனார்த்தத்திற்கு வேண்டிய சகல பதார்த்தங்களையுந்தேடி அடைதல சாததியமாகுமா? ஒருவன் பிறனிடத்தில் ஓர் பொருளைப்பெற்று திரும்ப அப்பொருளையேனும் அதற்கு ஒத்த வேறு பொருளையேனும பிறன் தன்பால் வேண்டும்போது கொடுக்குஞ் சக்தி யிருந்துங் கொடாதொழிவது சோரத்துவமன்றோ? அதுபோல் தான் ஒருவனிடத்து ஓர் நன்றியைப் பெற்று சக்தியிருந்தும் பிறனுக்கதைச் செய்யாதொழிவது சோரத்துவமன்றோ! எண்ணிறந்த ஜீவகோடிகளுள்ளும் மிக்க இழிபிறப்பெனக்கூறும் நாயுமல்லவோ தனக்கோர் நன்றி செய்த எஜமானனுக்கு இடுக்கண் வந்தபோது தன்னாலுதவிய கைம்மாறு புரிந்து கலக்கந் தீர்க்கின்றது. இந்நாயிலுங் கடையராகிய நன்றி குன்றிய தீயதூர்ச்சனர் உலகத்துப்பிறந்தென்? இருந்தென்? தேகமானது செழித்தோங்கி வளர்ந்து விர்த்தியடையவேண்டில், கரசரணாதி அவயவங்களும் அந்தக்கரண புறக்கரணங்களும் ஒன்றிற்கொன்று சகாயமாகவிருந்து தத்தமக்கியன்ற வழி தொழில் செய்து வருதல் ஆவசியகமன்றோ? மனம் செலுத்துங்கால் கால் நடந்தோடிச் செலலாமலும், கை ஓர் தொழிலைப் புரியாமலும், வாய் புசிக்காமலும், உதராக்கினி அதனை ஜீரணிக்காமலும் இருந்தால் மனிதன் ஜீவிப்பானோ? கை கால் முதலிய உறுப்புகள் வலிவுடையவைகளாக விருக்குமா? அதுபோல் உலகத்தவர் ஒருவருக்கொருவர் சகாயமாய் தம்மாலியன்ற கருமங்களைப் புரிந்து வராவிடில் உலகம் நிலைபெறுமா? ஆயினமையின் ஒருவனுடைய சுகவிர்த்தி அவனைச் சூழ்ந்த பலருடைய சுகவிர்த்தியை யொட்டி இருக்கின்றமையால், தஞ்சுகம் விரும்பும் ஒவ்வொருவரும், தம்மாலியன்ற நன்றிபுரிந்து பிறர் சுகத்தைப் பாதுகாத்தல்வேண்டும். இவ்வாறு புரிவதைவிட்டு ‘நன்றிமறவேல்’ என்றும் ‘நன்றிமறப்பது நன்றன்று’ என்றும் சொல்லிய விவேகிகள் சொல்லை வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோவென்று, வாய்மதம் பேசி, சகாய சோரர்களாய் நன்றிபுரியாது இகழ்பவர்களுக்கு சுகாரோக்கியம் எட்டுணையுங் கிட்டாது கிட்டாது.

துரபிமானம்.

துரபிமானமென்பது ஒருவர் தம்பொருட்டேனும் தம்மால் அனுசரிக்கப்பட்ட பிறர்பொருட்டேனும் தம்மால் கடைப்பிடித்தொழுகப்படும் ஓர் கொள்கையின்பொருட்டேனும், நியாய விருத்தமாகவும் நீதிதவறாகவும் மனச்சான்றுக்கு விரோதமாய் மானத வாசிக காயிகங்களைச் செய்தலாம். மானதம் மனத்தாற் செய்வது; வாசிகம வாக்காற் செய்வது; காயிகம் உடம்பாற் செய்வது. துரபிமானம் பொய்யைப் பெற்றதாய், அசத்தியத்தை ஆதரிக்குந் தாதி, அற்பத்தனத்தை ஆதரிக்குந் தந்தை, சதி மோசத்திற்கு சகோதரம், வஞ்சனை பலவற்றையுந் தழுவுஞ் சுற்றமுமாதலால் துரபிமானத்தால் விளையும் மானுஷதுன்பம் ஒன்றல்ல. துரபிமானி தன் அபிமானங் காரணமாக பொய்மொழி பகரவும், பொய்ச்சான்று சொல்லவும், புன்மை பல புரியவும், இன்னல் விளைக்கவும், இடுக்கண் புரியவும், அஞ்சாத வஞ்ச நெஞ்சனாதலால் அன்னோனை மானுஷ மறலியென மதித்தல் வேண்டும். ஒருவன் அகத்தியமுனியினும் அதிகங் கற்ற கல்விமானாயினும், சதாகாலமும் வற்றாத சமுத்திரம்போல செல்வக்களத்தினைச் சேமித்துவைத்துள்ள செல்வனாயினும், அறிவாலும் அமைதியாலும் உணர்வாலும் மற்றெல்லாச் சுகுணங்களாலும் சிறந்தோனாயினும், துரபிமானமென்பதொன்றுளவேல், கலப்பாலில கள்விடங் கலந்ததுபோல அவனது மேன்மை யனைத்துங் கெடும். மக்கட்பதடியுமாவன். ஒருவன், தான் அபிமானங்கொண்ட ஒன்றினிடத்தேனும், ஒருவரிடத்தேனும் உள்ள தவறுகளும் குற்றங்களும் பிழைகளும் துன்னடக்கைகளும் தோன்றாமையால், அவன் கண்ணிருந்துங் குருடனே; காதிருந்துஞ் செவிடனே; மற்றைய உணர்ச்சிகளிருந்தும் உணர்ச்சியில்லாப் பிணமே; பிணமேனும் யாதொருவருக்கும் தீங்கிழையாதிருக்கும், துரபிமானப் பிணமோ பொய்க்கு பயப்படாது; அசத்தியத்திற்கு அஞ்சாது; புன்மைக்குப் புறங்கொடாது; தீமைக்குத் திகிலடையாது; களவிற்குக் கருத்தழியாது; கொலையைப் புலையெனக் கருதாது; வஞ்சனையை நெஞ்சொழிக்காது; துன்பத்தையும் தூரேவிடாதாதலால், துரபிமானம் பிணத்தினும் இழியதென்பதே திண்ணம். எண்ணிறந்த ஜீவகோடிகளுக்குள்ளும் அதி விசேஷமாகிய மானுடப் பிறவியாகவிருந்தும், கற்றறியாத கல்வியினைக் கற்றும், பெற்றறியாத செல்வத்தினைப் பெற்றும், கேட்டறியாத கேள்வியினைக் கேட்டும், அடைந்தறியாத அனுபவத்தினையடைந்தும, உணர்ந்தறியாத நீதியினையுணர்ந்தும், சகவசித்தறியாத பெரியோர் சகவாசத்தினைச் சகவசித்திருந்தும், துரபிமானமென்னும் துட்ட மனப்பற்றையொழிக்காக் குறையினாலன்றோ பிணத்தினும் இழிய பிணமாகின்றனர். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் துரபிமானத்திற்கு ஆட்படாமல தூரேநின்று இகத்திலேயே சுகத்தை யடையவேண்டுமென்பது தத்துவவிவேசினிபத்திரக் கருத்து.

மோட்ச உலகம் எங்கேயிருக்கிறது?

(20 - வது பக்கத் தொடர்ச்சி.)

இப்போது நாம் என்ன நினைக்கவேண்டியிருக்கிறது? ஏசு வானவர் பரமண்டலத்திற்கேகினதுமலலாமல், கொஞ்சகாலத்திலெல்லாம் திரும்பிவந்து, ஸ்டீவெனுக்கும், பின்புபாலுக்கும் தரிசனந் தந்தார்; அதுமுதல் இன்னுஞ் சிலரும் அவரைப் பார்த்தார்கள்! ஒருவேளை இந்தப் பரம ரகசியததை நீர் விளங்கச் சொல்லுவீர், ஜீவனுள்ள சரீரம் பிரபஞ்சத்தில் எவ்வாறு ஏகுமோ அதைச் சொல்லுவீர்; ஒருவேளை உம்மைக்குறித்து நீர் தீர்மானஞ்செய்ய மனமில்லாதிருக்கலாம். அதிருக்கட்டும்; அப்படிப்பட்ட அவலட்சணமான அபத்தங்களைக் கவனிக்கும்படி நியாயமாய் ஒருதரம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்க, அப்படிப்பட்டவற்றைப் பிரசங்கிப்பதற்காகப் பணம் வாங்கிக்கொள்ளுகிறவன் வஞ்சகனென்று மதிக்கப்படத்தக்கவனல்லவா! வெகு தொலைவில் நமது மிக்க வலுவுள்ள டெல்லெஸ்கோப்

என்னுங் கண்ணாடிக் கருவியினால் காணப்பட்ட நட்சத்திரங்களின் தூரமானது இன்னும் வரையறுத்து நிச்சயிக்கப்படாதிருக்கிறது. ஆனால் அவற்றிற்கும் நமக்கும் இடையிலிருக்கிற மகத்தான வெளியை ஒளி கடந்துவருவதற்கு அநேக ஆயிர வருஷங்கள் செல்லும்படியான அவ்வளவு தூரத்தில் அவையிருக்கின்றன. சிலர் இருபதுலட்சம் வருஷம் செல்லுமென்றும், சிலர் அறுபது எழுபதினாயிரம் வருஷம் செல்லுமென்றும், மற்றுஞ்சிலர் அதிலுங்குறைந்தகாலந்தான் செல்லுமென்றுஞ் சொல்லியிருக்கிறார்கள். நமது பிரஸ்தாபவிஷயத்திற்குக் குறைந்ததையே வைத்துக்கொண்டாலும் நிமித்தமில்லை; ஏனெனில், நீர் மானிட சரீரத்தை ஆல்பாசெண்டாரி நட்சத்திரம்வரையில் கொண்டுபோய்விடுவீராகில், மற்றவற்றிற்கெல்லாம் உமக்கு நான வழிசொல்லுவேன்.

என்னுடைய நியாயங்களைப் பலப்படுத்தும்பொருட்டு, உமக்கு ஒரு சங்கதி தெரிவித்துக்கொள்ளுகிறேன்; அதாவது:—கணவனும் மனைவியும் வியாதியாயிருந்து, சற்று முன்னும் பின்னுமாக இறந்துபோகிறார்கள். அவர்கள் கிறிஸ்துமத மூடபக்தியினால் ஏமாந்தவர்கள்; அவர்களுக்குப் பரமண்டலத்தில் மறுபடி கூடியிருக்கவேண்டுமென்கிற பரஸ்பர கோரிக்கையுண்டு. அவர்கள் பூமியின் மத்தியரேகைக்குச் சமீபத்தில் வாசஞ் செய்கிறார்கள். புருஷன் மத்தியானத்திலிறந்து, நேரொழுங்காக மேலுக்குக் கிளம்பிப்போகிறான், மோட்சத்திற்கே போகிறானென்று வைத்துக்கொள்வோம்; மனைவி அன்று அர்த்தராத்திரியி லிறந்துபோகிறாள், அப்போது பூமியானது தன்னுடைய அன்றையசுற்றில் பாதி முடித்துவிட்டது; மனைவியும் நேராய்க் கிளம்பி மோட்சத்திற்கே செல்லுகிறாள். **கேள்வி.**—அவள் அவனை எப்போதுபோய்ப்பிடிப்பாள்? அவரவரும் தன்தன் நேரொழுங்கைப்பிடித்தே மோட்சவீட்டுக்குப் பறந்து செல்லுகிறார்களென்று உமக்குத் தெரியுதே, ஆனால் அவர்கள் ஒன்றற்கொன்று எதிரான திசையைநோக்கிமாத்திரஞ் செல்லுகிறார்கள். இந்தக் கருத்து நன்றாய் விளங்கிப் பரவட்டும், ஒருக்கால் பூமி சாஸ்திரத்தின் உண்மையையும் வானசாஸ்திரத்தின் உண்மையையும் ஜனங்கள் தெரிந்துகொள்ளட்டும், அப்பால் உமக்குப் பரமண்டலத்திற் சேர்ப்பிக்குங் கட்டணங் கிடைக்கமாட்டாது. நித்திய ஜீவனை அனுபவிக்கும்படியாகச் சந்தோஷத்துடனே உயிர்த்தெழுந்திருப்பார்களென்கிற நிச்சயமான நம்பிக்கையிலே அவர்களைப் புதைத்துவிடுகிறீர். இதற்குச் சமானமான மோசம் வேறே என்ன இருக்கிறது! ஒருவன் பார்த்தமாத்திரத்தில் நினைக்கும்படியான அவ்வளவு வஞ்சகர்களாக நீங்கள் நேரா யில்லாதிருப்பது நல்லகாலமே; ஏனெனில், நீங்கள் மூடபக்தியிலே வளர்க்கப்பட்டீர்கள், ஒருவேளை உங்களில் வெகு கொஞ்சம்பேர்தான் அதின் கோணங்கிக்கூத்தைத் தெரிந்துகொள்ளலாம், அதைக் கவனிக்கும்படியாய் நான் சொல்லுவதற்காக என்பேரில் கோபித்துங்கொள்ளலாம்.

நீங்கள் கோபித்துக்கொண்டால் பரவாயில்லை. நான் ஒரு சங்கதி சொல்லுகிறேன், கிறிஸ்தவ பரமண்டலத்தைக்குறித்து யாதொரு ஸ்திரமான சங்கதி நீர் தெரிவித்து, இப்போது ஏசுவானவர் இன்ன மண்டலத்திலிருக்கிறாரென்று சொல்லுவீராகில், யாதொரு தருமவிஷயத்திற்குச் செலுத்திவிடும்படி உமக்கு 25 பவுண்டு கொடுக்கிறேன். நீர் இந்த வாதத்திற்கு எதிர்நிற்பீராகில் நன்மையே; யாதொரு தருமத்திற்கு 25 பவுண்டு சித்தியாவதுமல்லாமல், நீர் நாஸ்திகர்பேரில் பெருத்த ஜயமுமடைவீர்; உமது மதத்துவேஷிகளின மனதைக் கலக்கடிப்பதற்கு இதைப்பார்க்கினும் நல்லசமயம் வாய்த்ததில்லை; இந்தச்சமயத்தை அவலம்பிக்கிறீரா? அதனால் நீர் இப்போது செய்துகொண்டிருக்கிற சாரமற்ற உபந்நியாசம் ஆயிரத்தைப்பார்க்கினும் அதிக நன்மையுண்டாகும்.

என்னுடைய வாதத்திற்கு நீர் எதிர்நிற்கமாட்டாவிட்டால், அந்த வெட்கத்தைப்பற்றி, பரமண்டலம் கிடைப்பிப்பதாகச் சொல்வதை விட்டுவிடும்; ஏசுவானவர் பரமண்டலத்திற்கேகினாரென்று பிரசங்கிப்பதை விட்டுவிடும்; நியாயமாய் ஸ்தாபிக்கக்கூடாமையாகவாவது காத்துக்கொள்ளக்கூடாமையாகவாவதிருக்கிறதென்று நீர் பூர்த்தியாயறிந்திருக்கிற மதத்தை ஜனங்களுக்குப் போதிப்பதை விட்டுவிடும்.

நான் மிகவும் வெடிப்பாய்ப் பேசுகிறேனென்று சிலர் நினைப்பதற்குச் சந்தேகமில்லை, ஆனால் இப்படிப்பட்டவிஷயங்களிலே வெடிப்பாய்ப் பிரவர்த்திப்பதே யோக்கியமான மார்க்கம். உலகத்தில் நடக்கிற பெருத்த மோசத்தைக் குறித்துத்தான் நான் போராடுகிறேன். கஷ்டப்பட்டு வேலைசெய்வது பிரயோசனகரமேயல்லாமல், மிருதுவான கைமேற் சோடுபோட்டுக்கொண்டு இனிமையான கடிதங்களெழுதுவதினாலொன்றுமில்லை. மேலும், எனது வெடிப்பான வார்த்தைகளை நீர் வாசிக்கையில், நான் ஏசு பேசினமாதிரியை அனுசரித்து, வேதபுத்தகத்திலுள்ள வீரமான வார்த்தைகளைப் பிரயோகித்திருப்பேனாகில், நான் எவ்வளவு முரட்டுத்தன்மையும் விஷத்தன்மையுமுள்ளவனாயிருந்திருப்பேனென்று நீர் ஒருவேளை யோசிக்கலாம். உமதுபேரிலாவது உமதுசோதரர்பேரிலாவது எனக்கு வேஷடையொன்றுமில்லையென்று உறுதியாய்ச் சொல்லுகிறேன்; நான் உமது மதத்தைச் சின்னபின்னமாய்க்கிழித்தெறிகிறேனேயல்லாமல், அதைப் போதிப்பவர்களுக்குத் தீங்கு செய்ய எத்தனப்படவில்லை.

[ஜோசெப் சைம்ஸானவர் எழுதியிருக்கிற சங்கதிகளைப் பார்க்குமிடத்து, அந்தக் கேள்விக்கு உத்தரவு சொல்லப் பெரிய குருவாகிய பிஷப்பவர்களுக்குக் கஷ்டமாயிருக்குமென்றே தோன்றுகிறது. ஆனால் அந்தக் கேள்விக்கு நாடோடியான இந்து குருக்கள் வெகு சுலபமாய் உத்தரவுசொல்லிவிடுவார். ஏனெனில், பூர்வீக இந்து குருக்கள்மார் மனோபாவனையாகவாவது அந்தந்த மண்டலத்தின் தூரத்தையும் விஸ்தீரணத்தையும் கணக்கிட்டு எழுதிவைத்திருக்கிறார்கள். கருடபுராணத்திலே மனுஷ்ய லோகத்திற்கும் யமலோகத்திற்கும் எண்பத்தாறாயிர காதவழியென்று ஸ்ரீமந்நாராயணனே சொல்லியிருக்கிறார். அதாவது, எட்டுலட்சத்து அறுபதினாயிரமயலாகிறது. அந்த யமபுரி நூற்று நாற்பத்துநான்கு காதவழி அகலமுள்ளது. அதாவது, ஆயிரத்து நானூற்று நாற்பது மயல். பூலோகத்திலிருந்து யமலோகத்திற்கு ஒரு ஜீவன் நமதுபன்னிரண்டுமாசத்தில்போய்ச் சேருவான். கிட்டத்தட்ட 7167 காதவழி தூரமாகிய ஒரு மாதப்பயணமுடிவிலே யாமியம் என்ற நகரஞ் சேர்வான். இரண்டாமாசப் பயணமுடிவில் சௌரி என்ற நகரமிருக்கிறது. 3-வது கந்தர்வ நகரம்; 4. குரூரபட்டணம்; 5. கிரௌஞ்ச நகரம்; அப்பால் நூறுயோசனை அகலமுள்ளவைதரணிநதி; 6. யமனுடைய தம்பியினது விசித்திர பட்டணம்; இதுவரையில் பாதிவழியாயிற்று. 7. பக்வாபாதம் என்னும் பட்டணம்; 8. துக்கத நகரம்; 9. நாநாக்கிரந்த பட்டணம்; 10. சுதத்தமென்னும்புரி; 11. சிதாப்ரநகரம்; 12. யமபட்டணம். இப்பன்னிரண்டு பட்டணங்களுக்கு இடைக்கிடையில் காடுகளும் நதிகளுமுண்டு. அப்பட்டணங்களிலே அரசர்களுமுண்டு. ஐரோப்பா வானசாஸ்திரக் கணக்குப்படி பூமிக்கும் சூரிய மண்டலத்திற்கும் சுமார் ஒன்பதுகோடி மயல் தூரமுளது. யமனுடைய பட்டணம் எட்டுலட்சத்து அறுபதினாயிர மயல தூரத்திலிருப்பதாகச் சொலலியிருக்கிறபடியால் சூரிய மண்டலத்தைப்பார்க்கினும் யமபுரியானது பூமிக்கு நூறுபங்குக்கு அதிக சமீபமாகவேயிருக்கிறது. மேற்குறித்த முதல்மாதப் பயண தூரத்திலிருக்கிற யாமியமென்கிற பட்டணம் சூரிய மண்டலத்தைப்பார்க்கினும் பூமிக்கு ஆயிரத்திருநூறுபங்கு சமீபமாகவேயிருக்கிறது. இதில நம்பிக்கையுள்ளவர்கள் எத்தனையோ கோடிகோடிக் கணக்கான தூரத்திலிருக்கிற நட்சத்திரங்களைக் கண்டறிந்ததாகச் சொல்லப்பட்ட ஐரோப்பா வான சாஸ்திரிகள் அதிசமீபத்திலிருக்கிற யாமியம்முதலான பட்டணங்களையும் நதிகளையும் காடுகளையும் கண்டறிந்து சொல்லாமையால், அந்தச் சாஸ்திரிகளுக்குச் சக்தி போதாதென்றும், அதனால் அவர்கள் கண்டறிந்ததாகச் சொல்வதை நம்பக்கூடாதென்றுஞ் சொல்லுவார்கள்; சாகிறவன் கண்ணுக்குத் தவிர மற்றவர்கள் கண்ணுக்கு யமதூதர்கள் தென்படாததுபோல அப்பட்டணங்கள் முதலியவை ஒருவர் கண்ணுக்குந் தென்படாவென்று சொன்னாலுஞ் சொல்லுவார்கள். ஆனால், அவையிருப்பது உண்மையாயின், நடுவில் ஸ்ரீமந்நாராயணன் வாசஞ் செய்துகொண்டு அதிக தூரத்திலிருக்கிற சூரியனும் மற்ற அண்டங்களும் நாம் பார்க்கக்கூடியவையாயிருக்கும்போது, அதிக சமீபத்திலிருக்கிற அவைகள் காணக்கூடாதவையாயிருக்கிறதென்பது அதிசயமாகவேமுடியும். E. D.]

இந்து சோதிடம்.

(19-வது பக்கத் தொடர்ச்சி.)

49. சோதிடத்தில் நம்பிக்கை தீங்கு விளைப்பது.

வாழ்நாட்களில் நேரிடும் நன்மை தீமையைப்பற்றிய பொய்யான ஜோசியத்தில் நம்பிக்கைவைப்பது வெகு

வாய்த் தீங்குவிளைப்பதாயிருக்கிறது. அனாவசியமான பயத்தையும் கவலையையும் வருத்தத்தையும் இடைவிடாது உண்டுபண்ணுகிறது. இடைவிடாது வீணான ஆசையையுண்டாக்கி, நியாயமாய் மனிதன் செய்யவேண்டிய முயற்சியைக் கெடுக்கிறது, வாழ்க்கைத் தொழிலைத் தடுக்கிறது. நல்ல விவாக ஏற்பாட்டைக் கலைக்கிறது. மனிதனுக்குரிய ஆராய்ச்சியைப் பலவீனப்படுத்துகிறது. இவ்வுலகத்திலே வேறொருவனுக்கு அடிமையாக்கிவிடுவதே மிகவுங் கெட்டது. ஆனால் மேற்படி நம்பிக்கையானது நம்பிக்கையுள்ளவனை அறிவும் உணர்ச்சியுமற்ற பூமிபோன்ற உருக்களுக்கும் அடிமையாக்கிவிடுகிறது. தன்னுடைய செய்கைகளிலெல்லாம் பூர்த்தியாய்ச் சந்திரனை நம்பி நடக்கிறவனைச் சந்திரரோகியென்று சொல்லலாம். ஆனால் தனக்குக் கடவுள் கொடுத்திருக்கிற பகுத்தறிவைவிட்டு, சந்திரனுடையவசமாய்மாத்திரமல்லாமலும், மற்றக் கிரகக் கூட்டத்தின்வசமாயும், சிலவற்றின் நிழல்வசமாயுங்கூடத் தன்னை ஒப்புக்கொடுக்கிறவனை இப்படிப்பட்டவனென்று சொல்வதற்குப் போதுமானமட்டில் உறப்பான வார்த்தைகள் எனக்குக்கிடையா.

50. சோதிடத்தில் நம்பிக்கையுள்ளவன் அடிமையாயிருக்கிறவிதம்.

ஏதாவது செய்வதற்கு நல்ல வேளையைக் கேட்டு அந்தப்படி செய்வதற்காக அவன் எப்போதும் சோதிடனைத் தேடவேண்டும். அதாவது; க்ஷவரஞ் செய்துகொள்வதற்கும், அவிழ்தஞ் சாப்பிடுவதற்கும், ஒரு பெரிய மனிதனைப்போய்ப் பார்ப்பதற்கும், வியாச்சியந் தொடருவதற்கும், மனு கொடுத்துக்கொள்ளுவதற்கும், இடத்தைவிட்டு வேலையின்பேரில் போவதற்கும், மறுபடி திரும்பிவருவதற்கும், விருந்திடுவதற்கும், விரதமனுஷ்டிப்பதற்கும், சாட்சி சொல்வதற்கும், விவரஞ்சொல்வதற்கும், பரீட்சை கொடுப்பதற்கும், விவாகப் பிரயத்தனத்திற்கும், குதிரை-வீடு-பசு-வண்டி வாங்குவதற்குமே; சுருக்கமாய், சந்தோஷமாவது வருத்தமாவது ஈரொட்டா யிருக்கிற யாதொரு காரியத்தைச் செய்யவாகிலும் செய்ய எத்தனப்படவாகிலுந் தான்.

51. சோதிடனது அகநகை.

ஜோசியஞ் சொல்லுகிற சோதிடன் தன்னுடைய மனதிலே, தன்னுடைய சாஸ்திரம் எவ்வளவு ஆதாரமற்ற லொடலொட்டையாயிருக்கிறதென்றும், கிரகநிலைகளைக்கொண்டு தான் சொன்ன ஜோசியம் எத்தனைவிசை தவறிப்போயிற்றென்றும், ரகசியத்தில் தெரிந்துகொண்ட சங்கதியைக்கொண்டு தான் எத்தனைவிசை ஜோசியஞ் சொல்லவேண்டியிருந்ததென்றும், ஊகித்து எத்தனைதரஞ் சொல்லவேண்டியிருந்ததென்றும், தனக்குத்தானேயாவது மானிட முயற்சியினாலாவது தன்னுடைய ஜோசியம் எத்தனைவிசைநிறைவேறிற்றென்றும், தான் சொல்லுகிறஜோசியமும் அது பலிப்பதும் கிரகநிலைகளுக்கு எவ்வளவு சம்பந்தப்படாதிருக்கிறதென்றும், கிரகசம்பந்தமில்லாத வேறேயோசனைகளினாலே எவ்வளவு நடக்கிறதென்றும் உணர்ந்திருக்கவேண்டியதே. மேலும், ஜனங்களுடைய பேதைமையினாலும் மூடபக்தியினாலும் குருட்டாட்டமான தப்பெண்ணத்தினாலும் தனது ஜோசியம் பலிக்கிறதென்றும், தனக்கு ஜீவனம் நடக்கிறதென்றும் நினைத்து எவ்வளவு நன்றி கூர்ந்திருககவேண்டும். ஆராய்ச்சியும் கியானமுமுள்ளவர்கள் சந்தேகித்துச்செய்கிற ஆட்சேபனைகளுக்குமாறாக எவ்வளவு சமத்காரமாய்க் கள்ள நியாயங்களினாலும் எவ்வளவு கபடமான பிடிவாதத்தினாலும் சாதித்து நமது சாஸ்திரத்தை நிலைநாட்டிக்கொள்ளுகிறோமென்று ஒவ்வொரு சமயத்தில் நினையாமற் போகமாட்டான். ஆயினும் மேற்கண்டவிஷயங்களைக் கபடமில்லாமல் மிகவும் பெருந்தன்மையாய் ஒத்துக்கொள்ளுகிற சோதிடர்களும் இல்லாமற்போகவில்லையென்று இங்கே குறிப்பது நியாயமே.

52. எக்காலத்தும் சோதிடம் உண்மையல்ல.

பூர்வகாலத்தில் சோதிடம் உண்மையாயிருந்ததென்றும், இக்காலத்திலே ஜனனகாலமும் கிரகநிலைகளும் வேறுவிதமாய் நிச்சயிக்கப்படுகிறபடியால அது இப்போது உண்மையல்லாமற்போயிற்றென்றும், சிலசோதிடர்கள் சொல்லிவிடுகிறார்கள், அதுவும் ஒரு மோஸ்தர்தான். அவை நிச்சயிக்கப்பட்டு வந்த விதம் நமக்குத் தெரியும். அநேகமாதிரியாக இப்போதும் நிச்சயிப்போம்; நிச்சயித்தபோதிலும், ஜோசியம் தவறிப்போகிறது போகிறதே. மேலும், ஜனனகாலத்தையும் கிரக நிலைகளையும் தெளிவாய் நிச்சயிப்பதற்குப் பூர்வத்திலிருந்ததைப் பார்க்கினும் இக்காலத்தில் அநேக சாதனங்களிருக்கின்றன. ஆகையால், எக்காலத்திலாவது சோதிடம் மெய்யாயிருந்திருந்தால், இக்காலத்தில் பின்னும் மெய்யாயிருக்கவேண்டும். ஆனால், எக்காலத்தும் சோதிடம் மெய்யா யிருந்ததில்லையென்று சொல்லுவதற்கு நான் பின்வாங்கமாட்டேன். ஏனெனில், சங்கதிகளின் தன்மையினாலேயே அது ஒருக்காலும் மெய்யாயிருக்கமாட்டாதென்று தெரியவருகிறது.

53. பொய் பின்னும் வளர்ந்தது.

சோதிடம் பொய்யாயிருக்க, அதின் வயிற்றில் பின்னும் புரளியானதொன்று ஜனித்தது. அதின் பெயர் பிரஸ்ன சாஸ்திரம். சோதிடத்தில் உபயோகிக்கப்பட்ட கிரகங்கள் உண்மையானவையே, அவை பலன் தருகிறதென்பது பொய்யே. ஆனால் பிரஸ்ன சாஸ்திரத்தில் கிரகங்களும் பொய்யே, பிரஸ்ன சாஸ்திரத்திலே மனோ பாவனையாக ஒன்பது கிரகங்கள் கற்பிக்கப்பட்டு, அவற்றிற்கு உண்மையான கிரகங்களின் பேரிடப்பட்டிருக்கிறது. அந்தப் பாவனா கிரகங்களுக்குப் பாவனா மனமும், பாவனா மனங்களினாலே பாவனாபலன்களும் கற்பிக்கப்பட்டன. பிரஸ்ன சாஸ்திரமுழுவதும் மோசமான கற்பனையே; யோசித்துப் பார்த்தால், ஆச்சரியப்படத்தக்க எவ்வளவுதூரத்திற்கு மோசத்தை நடத்தி ஏமாற்றக்கூடுமோ அதைக் கண்டறியும்பொருட்டே அது ஏற்படுத்தப்பட்டதாகக்காணும். சோதிடமானது வானசாஸ்திரத்துக்கு வம்புச் சோதரனாயிருந்தால், பிரஸ்ன சாஸ்திரமானது சோதிட சாஸ்திரத்துக்குக் கூத்திப்பிள்ளையாயிருக்கிறது. மேற்கண்ட சங்கதிகள் நம்பத்தக்கவையல்லவென்று தள்ளிவிடப் படாதபடிக்கு, ம-ா-ா-ஸ்ரீ, சிதம்பரம் ஐயர், B. A. அவர்கள் சொல்லியிருக்கிற சில்வாக்கியங்களை இங்கே உதகரிக்கிறேன்: "பிரஸ்ன அல்லது ஆரூட சாஸ்திரமென்று சொல்லப்பட்ட ஒரு விதசாகை சாஸ்திரத்தைப்பற்றி இப்போது சிலவார்த்தைகள் சொல்வோம். சோதிட சாஸ்திரத்திற்கு மிதற்கு மிருக்கிற வித்தியாச மென்னவென்றால்:—சோதிடசாஸ்திரமானது தென்படுகிற கிரகங்கள் சூரியனைச் சுற்றிச்செல்லுஞ்சாரத்தின்மேல் ஆதாரமாயிருக்க, ஆரூடசாஸ்திரமானது அடிவானத்தைச் சுற்றிவருகிறதாக எண்ணப்பட்ட சில தென்படாத கிரகங்களின் கமனத்தின்பேரில்மாத்திரம் ஆதாரமாயிருக்கிறது. அவற்றின் சாரதருமம் மிகவும் சுலபமானது. எட்டுக்கிரகங்களாகிய இவை அடியில்கண்டிருக்கிற கிரமத்தை அனுசரித்துச் செல்லுகிறது. சூரியன், அங்காரகன், பிரகஸ்பதி, புதன், சுக்கிரன், சனி, சந்திரன், ராகு, இந்தக்கிரகங்கள் ஒன்றுக்கொன்று ஒன்றரை ராசி வீடு தூரத்தில் சென்று, அடிவானத்தைச் சுற்றிவரப் பகலும் இரவுமாகிய 24 மணிநேரம்பிடிக்கிறது. சூரியனானவன் தினந்தோறும் சூரியோதயத்திலே மேஷத்தில பிரதமஸ்தானத்திலிருக்கிறான், அடிவானத்தை ராசிச் சக்கரமாகப் பன்னிரண்டு சமபாகமாய்ப்பிரித்து, ஒவ்வொருபாகம் ஒவ்வொரு ராசியென்று சொல்லப்படுகிறது; விருஷபராசியும், சிங்கராசியும், விருச்சிகராசியும் கும்பராசியும், முறையே நேர்கிழக்கு தெற்கு மேற்கு வடக்கு ராசிகள். மற்ற எட்டு ராசிகளும் ஒரு மூலைக்கு இருபுறத்திலும் இரண்டுவீதம் நான்கு மூலைகளி

லிருக்கின்றன. மேஷராசி வடகிழக்கு மூலைக்கு வலப்புறத்திலிருக்கிறபடியால், ராசிகளின் கிரமம் வானராசிகளின் கிரமத்தைப்போலவேயிருக்கிறது. கிரகங்கள் சுற்றிவருகிற சூரியனை சோதிடன் ஏற்படுத்திவைத்துக்கொள்ளுகிறான்; ஆருடம் கேட்கவந்தவன் நோக்கியிருக்கிற திசையையும், தென்படாத கிரகங்கள் அக்காலத்திலிருக்கிற நிலைமையையுங் குறித்துக்கொள்ளுகிறான். கணிக்கிறவிதத்தை நாம் இங்கே விவரமாகச் சொல்வதில்லை. கேட்கப்பட்ட சங்கதியைசோதிடன் கண்டறியத்தொடங்கி, பின்பு தன்னுடைய கிரகங்களைப் பார்த்து ஜோசியஞ் சொல்லுகிறான். இதில் அங்கவித்தியா அல்லது சேஷ்ட சாஸ்திரமென்று சொல்லப்பட்ட வேறொரு சாகைசோதிடத்தின் உதவி அவனுக்கு வேண்டியிருக்கிறது. ... ... ஜாதக சோதிடத்துக்கும் ஆருடத்துக்கும் வேறொரு முக்கியமானவிஷயத்திலே வித்தியாசமுண்டு: சோதிடத்தைக்கொண்டு ஒருவனுடைய ஜீவிதகாலத்து தூரசங்கதிகளைக்கூட முந்திச் சொல்லக்கூடும், ஆருடமானது உடனே நடக்கப்போகிற காரியங்களுக்குமாத்திரம் உதவும்: சோதிடம் பெருத்த காரியங்களைத் தெரிவிப்பதாயிருக்க, ஆருடமானது ஓர்தினத்தில் ஒருவன் புசிக்கப்போகிற போசனம், அவன் உட்காருகிற திசை, இப்படிப்பட்ட அற்ப காரியங்களைமாத்திரம் தெரிவிக்கும் ... ... இந்த வாழ்க்கைக்காரியங்கள் ஒருவனிருக்கிற ஏதோ ஒரு நிலைமையில் உடனே யுண்டாகிறபலனாயிருக்கிறது. இப்படிப்பட்டகாரியங்கள் ஆருடத்துக்கடுத்தவையேயல்லாமல், சோதிடத்துக்கடுத்தவையல்ல." வராஹமிஹிர என்பவரால் செய்யப்பட்ட பிரீஹத்ஜடக என்னுங் கிரந்தத்தின் இங்கிலீஷ் மொழிபெயர்ப்புக்கு முகவுரை.

54. ஐரோப்பியருடைய தீர்மானம் சோதிடம் உண்மையல்லவென்பதே.

இக்காலத்து ஐரோப்பா சாஸ்திரிகள் ஒவ்வொருவிஷயத்தையும் தீர்க்கமாக ஆழ்ந்து முழுவதும் நன்றாய் ஆராய்ச்சிசெய்கிறார்களென்று நமக்குத் தெரியும். கியான சம்பந்தமான அநேக துறைகளில் அவர்கள் செய்திருக்கிற முடிவு சந்தேகமற்றது. இப்போது ஐரோப்பா சாஸ்திரிகள் சோதிடம் பொய்யென்று ஒரே மனதாய் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். நமது தேசமாகிய இந்தியாவிலே சோதிடம் பலங்கொண்டிருப்பதுபோல, ஓர் காலத்தில் ஐரோப்பாவிலும் பலங்கொண்டிருந்த சோதிடத்தில் நம்பிக்கையுண்டாயிருந்தும், அவ்விதமாய் அவர்கள் முடிவுகட்டியிருக்கிறார்கள். சோதிடம் பொய்யென்று தற்கால ஐரோப்பா சாஸ்திரிகள் ஏகோபித்துச் செய்திருக்கிற தீர்மானத்தைச் சந்தேகிப்பதற்கு எவ்வித நியாயமுமில்லை. வேண்டுமானால், அந்தத் தீர்மானம் சரியானதாவென்று ஒவ்வொருவரும் சுதாவாய் ஆராய்ந்தறியலாம்.

55. கொண்டிருந்த எண்ணத்தை விட்டுவிட்டது.

இந்தச் சிறு புத்தகம் எழுதிக்கொண்டிருக்கையில் ஓர்காலத்திலே, சோதிடவிதிகள் சுத்தஆபாசமானவையென்றும், சோதிடம் நம்பத்தக்கதல்லவென்றும் வாசிப்பவர்களுக்குக் காட்டும்பொருட்டு, சோதிடவிதிகளில் சிலவற்றைப்பொறுக்கி யெடுத்து அச்சிட நினைத்திருந்தேன். ஆனால், அப்படிச் செய்வதற்கு அதிக இடமும் காலமும் பிடிப்பதுமன்றி, அதிக பிரயாசையுமுண்டாகுமாதலால், அந்த எண்ணத்தை விட்டுவிட்டேன். ஆயினும், எவர்களுடைய பிரயோசனத்துக்காக இச்சிறு புத்தகம் எழுதப்பட்டதோ அவர்கள் அதிகமாக வாங்கி வாசித்து, அந்த விதிகளை யறிய விரும்புவார்களாகில், அவற்றை வேறொரு பதிப்போடு அனுபந்தமாகச் சேர்த்து, எனது எண்ணத்தை முடிக்கலாம்.

56. முடிவு.

வாசிப்பவர் எனது உண்மையான கருத்தையும் நோக்கத்தையும் கிரமமாய்ப் பாராட்டுவாரென்றும், சகல பிடிவாதங்களையும் ஒழித்து, பட்சபாதமில்லாமல் சாக்கிரதையாய் உண்மையை ஆராய்வாரென்றுங் கோருகிறேன். அப்படிச் செய்யின், உண்மையைக் கண்டறிவாராக.

சில்லரை.

சவுத் ஆஸ்திரேலியன் அட்வர்டைஜரில், நியூசௌத் வேலஸைச் சேர்ந்த இன்வால் பிரதேசத்திலே ஒரு கோரமான காரியம் நடந்ததாக அறிக்கை செய்யப்படுகிறது. வாடாம் விண்டம் என்பவன் மதப்பித்து விகாரத்தினாலே தன் மனைவியையும் இரண்டுமக்களையும் கொலை செய்துவிட்டான. கொலைசெய்தவன்று ராத்திரி அவர்களுக்கு வேதபுத்தகத்தல் சில வாக்கியங்களை வாசித்தான. அவன் தன் மக்களை ஒரு கூர்மையான தினி முள்ளினால் குத்தியபின்பு, ஏசுக்கிறிஸ்துவைக் குத்தியதுபோலத்தான் நான் அவர்களைக் குத்தினேனென்று சொல்லினன.

"அவிஸ்வாசம் பரவுகிறதா ! அப்பா அதுவெல்லாம் வெறும் பயித்தியம். கிறிஸ்துமதத்தின் பிரயோசனம் இன்னும் அதிக பிரகாசப்படவில்லை," என்று மிஸ்டர் ஹப்ஸ் என்பவர் சொல்லுகிறார். ஆனால் கழிந்துபோன அநேக நூற்றாண்டுகளுக்குப் பின்பும், கிறிஸ்துமதத்தின் பிரயோசனத்தைக்குறித்துத் தமாஷாகப் பேசுவதுதானோ ! அது கடவுளிடத்திலிருந்து வந்ததாயிருந்தால், இதற்கு நெடுங்காலம் முந்தியே உலகமுழுதும் ஜெயித்திருக்கவேண்டும். சர்வவல்லவராகிய கடவுள் கிட்டதட்டப் பத்தொன்பது நூற்றாண்டுக்கு முன்னே புதுமதமொன்று ஏற்படுத்தினார், அதன் பிரயோசனத்தைப் பற்றி இப்போது நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். எல்லாமதங்களின் கதி யிதுதான்.

ஒரு ஆதிவாரங் காலையில், உல்கெஸ்-பாரீ பாதிரியார் "நல்ல கிறிஸ்தவனுக வாழும் வகை" யைப்பற்றி அன்று சாயங்காலம் பிரசங்கிப்பதாகச் சொல்லிப்போயினர். சரியானகாலத்திலே சபையார் வந்து கூடி, அந்த விஷயத்தினால் ஞானமடைய ஆவலுற்றவர்களாய்க் காத்திருந்தார்கள், ஆனால் பாதிரியார் வரவில்லை. கடைசியில் அவரை ஒரு கமிட்டியார் போலீஸ் ஸ்டேஷனில் கண்டார்கள், அவ்விடத்திலே அவர் குடி வெறியினாலே அக்கிரமமாய் நடந்தாரென்கிற குற்றத்திற்காக அடைக்கப்பட்டிருந்தார்; அவருக்கன்று ஒரு குழந்தை அளிக்கப்பட்ட சந்தோஷத்தினால், சம்மாளிக்கக்கூடாத அளவுக்குச் சாராயத்தைக் குடித்துவிட்டார்.

ஒருநாள் ஒரு போலீஸ் கோர்ட்டிலே வேடிக்கையான காட்சி நடந்தது. சத்தியஞ் செய்விக்கிறவர் ஒரு விதந்துவாகிய செவிட்டுச் சாட்சியை "புஸ்தகத்தை முத்தமிட்டுக்கொள்ளச்" சொல்லினர். அவள் "முத்தம்" என்கிற வார்த்தையைமாத்திரம் ஜாடையில் கிரகித்துக்கொண்டு, அவரைப் பார்த்து "இங்கேயல்ல" வென்று மெதுவாக நாணத்துடனே மறுமொழி சொல்லினள்.

எடிம்பரோ செய்ண்டு மேரி தேவாலயத்திலே,இரண்டொரு வாரத்துக்கு முந்திய ஆதிவாரம், வாத்தியக் கருவியினுடைய ஓசை இடி முழக்கம்போலிருந்தது, அப்போது சனங்கள் ஒவ்வொருவராய் வெளியில் போய்க்கொண்டிருந்தார்கள். ஆல்பர்ட்டுகிளென் என்னும் சிறுவன் அதற்குமுந்தி அவ்விடத்திற்கு எப்போதும்போனவனல்ல, அவன் அந்த ஓசையைக்கேட்டு, இவ்வளவு சந்தடி என்னத்திற்கென்று ஆச்சரியப்பட்டான். பின்பு அவனுடைய மனதில் ஒரு யோசனைபட்டு, ஆவலானநோக்கத்துடனே தன் தாயைத் திரும்பிப்பார்த்து, ஓ அம்மா, வாத்தியக்கருவி என்னத்துக்காக அவ்வளவு உரக்கக் கோஷித்ததென்று ஆச்சரியப்பட்டேன், ஆனால் தூங்குகிற ஜனங்களை எழுப்பி, இப்போது வீட்டுக்குப் போகலாமென்று அவர்களுக்குச் சொல்லுவதற்காகத்தானென்று தெரியவருகிறதென்றான்.

தத்துவவிவேசினி

நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Davaraja Moodelly Street,—Madras.